# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 17 திங்கட்கிழமை 02.09.2024 கதிர் 350







# மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் குறுகிய காலத்துக்குள் நடாத்தப்படும்

## அதி உச்ச அதிகாரப் பகிர்வுக்கும் தயார் என்கிறார்சஜித்

**“வடகிழக்கு பிரதேசங்கள் உட்பட நாட்டின் ஏனைய அனைத்து பிரதேசங்களுக்கும் குறுகிய காலத்துக்குள் மாகாண சபை தேர்தலை நடத்தி அதன் ஊடாக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்று தருவேன்” என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார். வட கிழக்கு மாகாணங்களுக்கும் நாட்டுக்கும் அபிவிருத்தியை தளிர் விட செய்வதற்கு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டைக் கூட்டுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேசத்தில் கட்சியின் தேர்தல் காரியாலயத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு** 2➤



# ஓடி ஒளித்த சஜித்தால் நாட்டை ஆளமுடியாது

## சஜித்தை விளாசித் தள்ளும் ரணில்



“பிரதமர் பதவியை ஏற்று என்னுடன் இணைந்து பணியாற்ற வருமாறு சஜித்துக்கு நான் அழைப்பு விடுத்தேன்.

ஆனால், டலஸைப் போட்டிக்கு நிறுத்தி அந்த வாய்ப்பையும் சஜித் ஏற்கவில்லை. ஓடி ஒளிந்த சஜித்தால் இந்த நாட்டை ஆள முடியாது” என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிலாபத்தில் நடைபெற்ற ‘இயலும் ஸ்ரீலங்கா’ வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரை யாற்றுகையில்,

“ஆட்சியமைக்க அழைப்பு விடுத்தும் முதல் தடவையாகவே எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் அதனை நிராகரித்தார். இது கின்னஸ் சாதனையாகும். போராட்டத்தின்போது நாடாளுமன்றத்தைக் கைப்பற்ற ஆர்ப்பாட்டக்காரக்கள் முயன்ற போது அங்கிருந்த அனைவரும் வெளியேறினார்கள். இன்று தலைமைத்துவம் கோரும் அனைவரும்பயந்து ஓடினார்கள்.

நான் நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்காவிட்டால் பங்களாதேஷத்தைப் போன்று எம்.பிக்கள் கொல்லப்படும் நிலை ஏற்பட்டிருக்கும். பிரதமர் பதவியை ஏற்று என்னுடன் இணைந்து பணியாற்ற வருமாறு சஜித்துக்கு நான் அழைப்பு விடுத்தேன். ஆனால், டலஸைப் போட்டிக்கு நிறுத்தி அந்த வாய்ப்பையும் சஜித் ஏற்கவில்லை. ஓடி ஒளிந்த சஜித்தால் இந்த நாட்டை ஆள முடியாது.

என்னை ரணில் – ராஜபக்ஷ என்று விமர்சித்தார்கள். இன்று அந்த ராஜபக்ஷக்கள் விலகிச் சென்றுள்ளனர்.

பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்துள்ளோம். உலக நாடுகளினதும் அமைப்புகளினதும் ஆதரவு கிடைத்தது. பொருளாதாரத்தை முன்னேற்ற முடிந்துள்ளது. அரச ஊழியர்களின் சம்பளத்தைப்போன்றே ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவும் அதிகரிக்கப்படுகின்றது.

பங்களாதேஷில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டும் தேர்தல் நடத்த முடியாத நிலை உள்ளது. எம்.பிக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சபாநாயகரைக் 2➤

## பண்டாரவளை ரயில் நிலையத்தில்

# தமிழ் இளைஞர் மீது தாக்குதல் 8 இராணுவ சிப்பாய்கள் கைது

பண்டாரவளை, ரயில் நிலையத்தில் தமிழ் இளைஞர் ஒருவரைத் தாக்கிக் குழப்பத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் 8 இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரயில் நிலைய அதிபரால் பண்டாரடவளை பொலிஸாருக்குத் தொலைபேசி ஊடாக வழங்கப்பட்ட தகவலுக்கமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு 8.30 மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் கூறினர். 2➤

# ஊழல், மோசடி 3 ஆண்டுக்குள் முடிவுக்குக் கொண்டுவரப்படும்

## நாமலின் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

தேர்தல் மேடைகளில் பிரதான பிரச்சாரமாக பயன்படுத்தப்படும் ஊழல், மோசடி ஒழிப்பு கோசத்தை 3 ஆண்டுக்குள் முடிவுக்கு கொண்டு வருவோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வமத வழிபாடுகளுடன் “நாமல் இலக்கு – உங்களுக்காக முன்னேற்றகரமான நாடு” என்ற தொனிப்பொருளின் கீழ் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை காலை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பின்னர் உரையாற்றுகையிலேயே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு நாமல் ராஜபக்ஷ மேலும் உரையாற்றுகையில், “தேர்தல் மேடைகளில் பிரதான பிரச்சாரமாக பயன்படுத்தப்படும் ஊழல், மோசடி ஒழிப்பு கோசத்தை 2➤

# தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தை இணைந்து நடைமுறைப்படுத்வோம்

## - மாவை சேனாதிராஜா



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியாவில் நேற்று நிறைவேற்றிய தீர்மானத்தை ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம் என அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழில் இன்று நடைபெற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் நினைவேந்தலில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், சுகவீனம் காரணமாக நேற்றைய இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்தை ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம்” என்றார்.

## ஓடி ஒளித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணவில்லை. பிரதம நீதியரசர் துரத்தப்பட்டுள்ளார். ஆனால், நாம் நிலைமையைச் சீராக்கி தேர்தல் நடத்துகின்றோம். ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியாலே அதனைச் செய்ய முடிந்தது.

மக்கள் ஆணையைப் பெற்று நாம் ஆரம்பித்த திட்டங்களை நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றேன். மக்களுக்கு வாழ்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பொருளாதாரம் எனும் வீடு உடைந்தது. அதனைக் கட்டியெழுப்பி வருகின்றோம். எனது 5 அம்சத் திட்டத்தை 5 வருட இக்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றேன்.

மாதம்பே முதலீட்டு வலயத்தை உருவாக்க இருக்கின்றோம். சிலாபம் துறைமுகத்தைப் பிரதான மீன்பிடித்துறைமுகமாக அபிவிருத்தி செய்வோம். மீனவர்களின் உற்பத்திகளை கட்டுநாயக்கவுக்கு அனுப்பலாம். கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபத்துடன் இணைக்க இருக்கின்றோம். கற்பிட்டியில் துறைமுகம் ஒன்றை உருவாக்கவும் சுற்றுலா வலயம் ஒன்றையும் அமைக்கவும் இருக்கின்றோம். இரணவிலயிலும் சுற்றுலா வலயம் ஏற்படுத்தப்படும். சகல தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்று இந்தத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது அணியினர் பிரிந்து சிலர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியினால் வெல்ல முடியாது. சஜித்துக்கு வழங்கும் வாக்கு அநுரவுக்கு வழங்கும் வாக்குகளைப் போன்றதாகும். எனவே, ஐ.தே.க. ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து வெற்றிக்காகச் செயற்பட வேண்டும்" என்றார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"வடக்கு மாகாண மக்கள் யுத்தத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்டார்கள். யுத்தம் இடம்பெற்ற நாடுகளில் யுத்தத்தின் பின்னர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்புவதற்காக சர்வதேச நன்கொடையாளர் மாநாடு கூட்டப்படுகின்றது.

ஆனால், எமது நாட்டில் யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் நிறைவடைந்த போதும், எந்த ஒரு தலைவரும் அவ்வாறான நன்கொடையாளர் மாநாட்டை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த மாநாட்டின் ஊடாக கிடைக்கின்ற உதவிகளை வடகிழக்கு மாத்திரமல்லாமல் முழு நாட்டையும் அபிவிருத்தி அடையச் செய்வதற்கு பயன்படுத்த முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடாத்துவதோடு, அதன் ஊடாக வடகிழக்கு மாகாணங்கள் மாத்திரமல்லாமல் முழு நாட்டையும் அபிவிருத்தி அடையச் செய்ய முடியும்.

அதேபோன்று ஒரே நாட்டிற்குள் உச்சபட்ச அதிகாரத்தை பகிர்ந்து, அரசியல் ரீதியாக வளப்படுத்துவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். மாகாண சபைகளின் அதிகாரங்களை அரசாங்கம் பறித்திருக்கின்றது. அது இடம்பெறக் கூடாது. மத்திய அரசாங்கத்தினாலும், மாகாண சபைகளின் ஊடாகவும், உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாகவும் இடம்பெற வேண்டிய அபிவிருத்திகளை முன்னெடுக்க தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றின் அதிகாரங்களை பறிக்கக் கூடாது.

வட மாகாண சபை இல்லாமல் இருக்கின்றது. அதனால் வடகிழக்கு பிரதேசங்கள் உட்பட நாட்டின் ஏனைய அனைத்து பிரதேசங்களுக்கும் குறுகிய காலத்துக்குள் மாகாண சபை தேர்தலை நடத்தி அதன் ஊடாக அபிவிருத்தி வேலை திட்டங்களை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்று தருவேன்" என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## தமிழ் இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தியத்தலாவை இராணுவ முகாமியில் சேவையாற்றும் மேற்படி இராணுவச் சிப்பாய்கள், விடுமுறையில் வீடு செல்லும் வழியிலேயே இவ்வாறு ஒழுக்கமற்ற விதத்தில் செயற்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் பண்டாரவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. ரயில் நிலைய அலுவலகக் கடமையின் நிமித்தம் ரயில் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அவ்வேளையில் ரயிலில் இருந்து இறங்கியுள்ள மேற்படி இராணுவச் சிப்பாய்கள், பாடல் பாடியுள்ளதுடன், கூச்சல் சத்தமும் எழுப்பியுள்ளனர். இதன்போது நிலத்தில் வீழ்ந்திருந்த பணப் பையை அவர்களிடம் ஒப்படைப்பதற்குத் தமிழ் இளைஞர் ஒருவர் சென்றுள்ளார்.

இதன்போது அந்தத் தமிழ் இளைஞர் பணம் களவாடியுள்ளார் என்று கூறி அவர் மீது இராணுவச் சிப்பாய்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ரயில் நிலைய அதிபரும், அங்கிருந்தவர்களும் தாக்குதலைத் தடுக்கச் சென்ற வேளை, அவர்கள் மீதும் தாக்குதல் நடத்த முற்பட்டு, அடாவடியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் பண்டாரவளை ரயில் நிலைய அதிபர் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஆகியோரால் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் பண்டாரவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## ஊழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

3 ஆண்டுக்குள் முடிவுக்கு கொண்டு வருவோம். நாட்டின் ஒற்றையாட்சி அரசியலமைப்பும் பௌத்த சாசனமும் பாதுகாக்கப்படும்.

பொருளாதார மேம்பாட்டுக்கான பொறுப்பை நாங்கள் ஏற்போம். ஆட்சியமைத்து 6 மாதங்களுக்குள் முழு அரசசேவை கட்டமைப்பையும் டிஜிட்டல் மயப்படுத்துவோம். வரிக் கொள்கையில் நேரில் வரி முறைமையை செயற்படுத்துவோம். 10 ஆண்டுக்குள் நேர் மற்றும் நேரில் முறைமை ஊடாக 20 இலட்சம் தொழில் வாய்ப்புக்களை தோற்றுவிப்போம்.

எதிர்வரும் 10 ஆண்டுகள் வலுச் சக்தியை ஏற்றுமதி செய்யும் நாடாக இலங்கையின் சக்தி வலுத்துறையை மேம்படுத்துவோம். இளம் தலைமுறையினரை உள்ளடக்கிய வகையில் ஆசியாவில் அபிவிருத்தி அடைந்த நாடாக இலங்கையை மேம்படுத்துவேன் என்று நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.





# தர்மலிங்கத்தின் 39 ஆம் ஆண்டு நினைவேந்தல்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், தாவடியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் இன்று காலை 7 மணியளவில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அன்னதானம் றிச்சாட் தவப்பிரகாசம் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரையாற்றினார்.

இந்த நிகழ்வில் வி.தர்மலிங்கத்தின் மகனும் புளொட் அமைப்பின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தவிசாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

23 வருடங்கள் மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம் 1985 ஆம் ஆண்டு செப்டெம்பர் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இதேநாளிலேயே கோப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.ஆலாலசுந்தரமும் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட


காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சமத்துவக் கட்சி சஜித்துக்கு ஆதரவு! சஜித் - சந்திரகுமார் இன்று அறிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் சமத்துவக் கட்சியானது ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிறேமதாசவை ஆதரிப்பதற்கு தீர்மானித்துள்ளது என அக் கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் இன்று சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச மற்றும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் மு.சந்திரகுமார் ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சமத்துவக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

"தமிழ் மக்களினதும் இலங்கைத் தீவினதும் எதிர்கால நன்மைகளைக் கருத்திற்கொண்டு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பதென சமத்துவக் கட்சி தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு முன் எமது மக்கள், எமது ஆதரவாளர்கள், எமது சூழலில் இயங்கும் பல்வேறு செயற்பாட்டு அமைப்புகள், ஆக்கபூர்வமான செயற்பாட்டாளர்கள் ஆகிய தரப்புகளோடு கலந்தாய்வுகளைச் செய்திருந்தது, அத்துடன், வரலாற்று அவதானிப்பு, சமகால நிலவரம், எதிர்காலப் பயணம் ஆகியவற்றைக் குறித்தும் ஆராய்ந்தது.

இதன்படி – இனரீதியாக ஒடுக்குதலுக்குள்ளாகும் தமிழ்பேசும் மக்களின் அரசியலுரிமையை அங்கீகரித்து, அதற்கான செயலாக்கப் பொறிமுறையை அமுலாக்கம்செய்யக்கூடிய உத்தரவாதம். போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கும் போராளிகளுக்கும் நலத் திட்டங்களையும் அவர்களுடைய மேம்பாட்டையும்முன்னிலைப்படுத்துவது. வடக்குக் கிழக்கு மாகாணங்களை துரித கதியில் மீளக் கட்டியெழுப்புவதற்கான வழிவகைகளைச் செய்வது. பல்லினத்தன்மை, பன்மைத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில்

சமத்துவத்தைப்பேணக்கூடியவாறான அதிகாரங்களை உத்தரவாதப்படுத்தும் அரசியலமைப்பை உருவாக்குவது. ஊழலை ஒழிப்பது. நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவது. புலம்பெயர் மக்களின் அரசியல், நிதி, மற்றும் முதலீட்டுப் பங்களிப்புகளுக்கான இடத்தை அளிப்பது. அரசியற் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்துவது. நில உரித்துக்கான செயலாக்கப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவது போன்றவற்றில் சாதகமான சூழலை அளிக்கும் வேட்பாளரை ஆதரிப்பது எனக் கட்சி முடிவெடுத்தது.



இதனையடுத்து பிரதான வேட்பாளர்களோடு பேச்சுக்கள் நடத்தப்பட்டன. அவற்றில் எமக்கு ஓரளவு திருப்தியளிக்கக் கூடியவகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேதாசவின் உத்தரவாதங்களே அமைந்தன.

தமிழ்பேசும் மக்களுடைய எதிர்காலமும் இலங்கைத்தீவின் எதிர்காலமும் சமாந்தரமானவை என்பதுடன் ஒன்றிலிருந்து ஒன்று பிரித்துப்பார்க்க முடியாதவையாகவும் உள்ளன. இந்த அடிப்படையிலிருந்து நாம் விலகும் போதெல்லாம் தமிழ்பேசும் மக்களுக்கு இரட்டை நெருக்கடி ஏற்படுகிறது. இதுவே வரலாற்று அனுபவமாகும்.

எமது இந்த நிலைப்பாட்டினை உணர்ந்து எமது மக்கள் தமது ஆதரவை சஜித் பிரேமதாசவுக்கு அளிக்க வேண்டும் எனச் சமத்துவக் கட்சி கோருகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (113)



# களத்தில் இறங்கியது "க.:.பே" இதுவரை 435 முறைப்பாடுகள்

(நவாஸ்)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் அமைப்பான கஃபே தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கு இதுவரை 435 முறைபாடுகள் பதிவாகி உள்ளன.

இம்முறைபாடுகளில் அதிகளவான முறைபாடுகள் சட்ட விரோத தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பிலே பதிவாகி உள்ளன என கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கின் கூறியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான அறிவுறுத்தல் விடுக்கபட்ட தினத்திலிருந்து வேட்புமனு தாக்கல்செய்கின்ற தினம்வரைக்கும் பதிவாகியுள்ள முறைபாடுகளில் அதிகளவான முறைபாடுகள் அரச சொத்து துஷ்பிரயோகம் தொடர்பிலே பதிவாகி இருந்தது.


ஆனாலும் வேட்புமனு தாக்கல் செய்ததன் பின்னரிலிருந்து இதுவரையான காலப் பகுதிகுள் கஃபே அமைப்புக்கு பதிவாகியுள்ள முறைபாடுகளில்அதிகளவிலான முறைப்பாடுகள் தேர்தல் சட்ட விதிமுறை மீறல் தொடர்பாகவே பதிவாகி உள்ளன என கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மகீன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலின் கண்காணிப்புநடவடிக்கைகளில்ஈடுபடுவதற்காக கஃபே அமைப்பு, 25 மாவட்டகளிலும் 25 மாவட்ட இணைப்பாளர்கள் அதேப்போன்று,160 நீண்டகால கண்காணிப்பாளர்களை நியமித்து, தேர்தலுக்கு முன்னரான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு கொண்டிருகின்றது.

அதேபோன்று தேர்தல் பிரச்சார நிதியினை கண்காணிப்பதற்காக 40 தேர்தல் தொகுதிகளில் 40 நீண்டகால கண்காணிப்பாளர்களை நியமித்து தேர்தல் பிரச்சாரத்திற்காக ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அமைச்சர்களும் செலவு செய்கின்ற செலவு தொடர்பிலான கண்காணிப்பினை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கு மேலதிகமாக செப்ரெம்பர் 21ம் திகதி தேர்தல் தினத்தில் தேர்தல் தின கண்காணிப்பாளர்களாக நாடளாவிய ரீதியில் 3500 தேர்தல் தின கண்காணிப்பாளர்களை நியமித்து அதன் ஊடாக தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில்ஈடுபடுவதற்கு கஃபே அமைப்பு ஏற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளரான மனாஸ் மகீன் குறிப்பிட்டுள்ளார்.






# தென்னிலங்கை விஞ்ஞாபனங்களும் தமிழரசுக் கட்சியின் அதிரடி முடிவும்

**அகிலன்**

தென்னிலங்கையின் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருப்பதை நியாயப்படுத்தும் வகையில்தான் இந்த விஞ்ஞாபனங்கள் அமைந்திருக்கின்றன. இந்த விஞ்ஞானங்களுக்காக காத்திருந்த தமிழரசுக் கட்சியினர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க முடிவெடுத்துள்ளார்கள்.

பிரதானமான ஜனாதிபதி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தித் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் கடந்த வாரத்தில் வெளிவந்தன. மற்றொரு ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் இந்த வாரம் வெளிவரவுள்ளது.

விஞ்ஞாபனத்தை வெளியிட்ட எந்தவொரு வேட்பாளரும் வடக்கு, கிழக்கு இணைப்பு, சமஷ்டித் தீர்வு, மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்த உறுதிமொழியையும் வழங்கவில்லை. நாமல் ராஜபக்ஷ தாம் அதிகாரப் பகிர்வுக்கும், வடக்கு கிழக்கு இணைப்புக்கும் எதிரானவர் என்பதை ஏற்கனவே உறுதிப்படுத்தியிருக்கின்றார். ஆக, தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளையிட்டு அவர்கள் யாரும் கவலைப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவின் "வளமான நாடு அழகான வாழ்க்கை" என்ற பெயரிலான தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த திங்கட்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கான தேசிய மக்கள் சக்தியின் உறுதி மொழிகளாக அரசியலமைப்பு மறுசீரமைப்பு பணியை துரிதப்படுத்தி ஒரே நாட்டிற்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்பு கொள்ளக்கூடியவாறு மொழி உரிமை உறுதிப்படுத்தப்படுவது போன்ற விடயங்களே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் மற்றும் நிர்வாக ரீதியில் அதிகார பகிர்வுடனான புதிய அரசியலமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த காலங்களில் இடம்பெற்ற படுகொலைகள் காணாமல் போகச்செய்தல் ஆட்கடத்தல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு நீதியை நிலை நாட்டவும், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களிலும்

மக்களது சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான சிவில் நிர்வாகத்தினை முறைமைப்படுத்த வும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பவை மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தன.

அநுர குமாராவின் தேர்தல் விஞ்ஞாபனம் இவ்வாறுதான் வரும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். சிங்களக் கடும் போக்காளர்களின் வாக்குகள்தான் அவர்களுக்கு முக்கியமானவை. தமிழர்களுக்கு உறுதிமொழிகளைக் கொடுத்து அதனை இழக்க அவர்கள் தயாரில்லை.

பிரதான இரு வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களுக்கு காத்திரமான விடயங்கள் உறுதிமொழிகளாக வழங்கப்படுமென எதிர்பார்த்திருந்தார்கள். தமது ஆதரவை எந்த வேட்பாளருக்கு வெளிப்படுத்துவது என்பது தொடர்பில் முடிவெடுக்க தமிழரசுக் கட்சியினர் இவ்விருவரின் தேர்தல் விஞ்ஞாபனங்களை எதிர்பார்த்திருந்த நிலையிலேயே இவ்விருவரினாலும் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களும் ஏமாற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வியாழக்கிழமை கொழும்பு தாஜ்

சமுத்திரா ஹோட்டலில் வைத்து வெளியிடப்பட்ட "ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பு, சமஷ்டித் தீர்வு, மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்த உறுதிமொழிகளும் வழங்கப்படவில்லை.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக 2024 இல் நாம் முன்வைத்த முன்மொழிவின் பிரகாரம் அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படும், மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகூகாரங்கள் வழங்கப்படுவது தொடர்பான தீர்மானம் எடுக்கும் அதிகாரம் புதிய நாடாளுமன்றத்துக்கு வழங்கப்படும். உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுச் சட்டம் நடை முறைப்படுத்தப்படும். காணாமற் போனவர்கள் தொடர்பான நவாஸ் ஆணைக் குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு சுயதொழில் ஆரம்பிப்பதற்கான நிதியுதவி என்பன போன்ற உறுதி மொழிகளே இதில் உள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் தேர்தல் விஞ்ஞாபனம் வியாழக்கிழமை கண்டியில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களுக்கு கைளிக்கப்பட்ட பின்னர் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் ஊடாக பொது மக்களுக்கு வெளியிட்டு வைக்கப்பட்டது.

"சகலருக்கும் வெற்றி" என்ற வெளியிடப்பட்ட அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்கான வாக்குறுதிகளாக தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய நாடாளுமன்ற முறைமைக்கு மாற்றப்படும். புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை, 13ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். அரசியலமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியினால் ஒருதலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்பவையே என்பனவே உள்ளன.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ஷ ஏற்கனவே வடக்கு, கிழக்கு ஒருபோதும் இணைக்கப்படாது, காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு ஒருபோதும் வழங்கப்படாது என தனது கன்னிப் பிரசார மேடையிலேயே அறிவித்து விட்டார். ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பில் தமிழ் மக்களும் தமிழ்க் கட்சிகள் சிலவும் பெரும் எதிர்பார்ப்பை வைத்திருந்த நிலையிலேயே அவர்களும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடும் அதேவேளையில், நான்கு பிரதான வேட்பாளர்களும் களமிறங்கியிருக்கின்றார்கள். இந்த நிலையில், தமிழ் மக்களுடைய வாக்குகளே தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பின்னணியில்தான் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில், சஜித், அநுர ஆகியோர் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அதிகளவு விஜயங்களை கடந்த சில மாதங்களாக மேற்கொண்டிருந்தார்கள். பல வாக்குறுதிகளையும் வழங்கியிருந்தார்கள். தமிழ் மக்களுடைய எதிர்ப்பார்ப்புக்கள் என்ன என்பதையும் பல்வேறு தரப்பினருடனான சந்திப்புக்களின் மூலமாக அவர்கள் அறிந்திருந்தார்கள்.

பிரதான வேட்பாளர்களின் விஞ்ஞானங்கள் வெளிவந்ததன் பின்னர்தான் தமது கட்சி முடிவெடுக்கும் என்று சுமந்திரன் கூறிவந்தார். நாளை மறுதினம் தபால் மூலான வாக்களிப்பும் ஆரம்பமாகிறது. இந்த நிலையில், நேற்று வவுனியாவில் கூடிய தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி எடுத்துள்ளது. மாவையோ சிறிதரனோ இந்தத் தீர்மானத்துக்கு உடன்பட்டதாகத் தெரியவில்லை. இந்தத் தீர்மானத்தின் பின்னணியில் சுமந்திரன்தான் இருந்துள்ளார் என்பதும் இரகசியமானதல்ல.

கட்சி ஏற்கனவே நீதிமன்றத்தில் நிற்கும் நிலைமையில், இந்த முடிவுகள் பிளவை மேலும் அதிகமாக்கப்போகின்றது. லண்டனிலிருந்து நாடு திரும்பும் சிறிதரன், பொது வேட்பாளருக்கு ஆதரவான பரப்புரைகளை முன்னெடுப்பார். அதேவேளையில், சஜித்துக்கு ஆதரவான பரப்புரைகளை சுமந்திரன் முன்னெடுப்பார். ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து வரக்கூடிய பொதுத் தேர்தலில் இந்தப் பிரச்சினை தமிழரசுக் கட்சியின் வீழ்ச்சிக்கும் வழிவகுக்கலாம்.



# தங்கங்களின் கிறிக்கட் சமர் சம்பியனானது சிவானந்தா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி 29 வது தடவையாக ஒழுங்கு செய்திருந்த திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீகோணேஸ்வரா இந்து கல்லூரிக்கும், மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிறிக்கட் சமர் கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பாடிய திருகோணமலை அணி 32.5 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 13.4 ஓவர்களில் 2 விக்கட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

திருகோணமலை இந்து கல்லூரி அதிபர் எஸ்.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி சமரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே.சிவகுமார் பிரதம அதிதியாகவும், திருகோணமலை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.பரமேஸ்வரன் கௌரவ அதிதியாகவும், சிறுவர் கல்வி உதவிகள் அமைப்பின் சர்வதேச இணைப்பாளர் எஸ்.கங்காதரன் மற்றும் கனடா கிங் குறூப் பணிப்பாளர் பெஞ்சமின் லோரன் சுப்பிள்ளை ,மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி அதிபர் எஸ்.தயாபரன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். சிறந்த துடுப்பாட்ட வீரராக மட்டக்களப்பு அணியைச்சேர்ந்த துவாதரன் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த பந்து வீச்சாளராகவும், சிறப்பாட்டக்காரராகவும் மட்டக்களப்பு சிவானந்தா அணித்தலைவர் நிஷரூபன் தெரிவு செய்யப்பட்டார்.

ஆர்.தினேஸ்குமார் பொறுப்பாசிரியராகவும், ரீ.திசாந்தன் பயிற்றுவிப்பாளராகவும் இருந்து மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி கிறிக்கட் அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தனர்.

# 3 வது நீலங்களின் சமரில் கிளிநொச்சி இந்து வெற்றி




13ஆவது வடக்கின் நீலங்களின் சமரில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 05 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

வடக்கின் நீலங்களின் சமர் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிகள் மோதிய 13வது வடக்கின் நீலங்களின் சமரில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி ஐந்து இலக்குகளால் வெற்றி பெற்றது.

27ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவதுநாள்இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 66ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்திருந்தனர். 94 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி ஐந்து இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதுவரை நடைபெற்ற 13வடக்கின் நீலங்களின் சமரில் ஐந்து போட்டிகளில் இந்துக் கல்லூரி அணியும் மூன்று போட்டிகளில் மத்திய கல்லூரி அணியும் வெற்றி பெற்றன ஐந்து போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்திருக்கிறது.

13வது வடக்கின் நீலங்களின் சமரில் சிறந்த துடுப்பாட்ட வீரராக இந்துக் கல்லூரி வீரர் கே.கரிசாந் சிறந்த பந்து வீச்சாளராக மத்திய கல்லூரி வீரர் -ஜீ. கௌசிகன் தெரிவானார்கள்.

போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக இந்துக் கல்லூரி அணி வீரர் ரி.கிருசாந்தன், போட்டியின் சகலதுறை வீரராக கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி வீரர் ஜீ.-கௌசிகன், போட்டியின் சிறந்த களத்தடுப்பாளராக மத்திய கல்லூரி வீரர் எஸ்-வேங்கைமாறன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(113)

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்

வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை

மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்

கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி

மலைகளின் நடுவில்
குளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# பாவலர்மணி சரளா விமலராசாவின் மரபுக் கவிதை நூல்கள் வெளியீடு



(எம் எப் நவாஸ்)

சுவிற்சர்லாந்து பாவலர்மணி சரளா விமலராசாவின் மரபுக் கவிதை நூல்கள் வெளியீட்டு விழா இறைபணிச் செம்மல் த.கைலாயபிள்ளையின் தலைமையில் அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் இந்து இளைஞர் மன்ற கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக நாளுமன்ற உறுப்பினர் ரீ.கலையரசன், முன்னாள் நாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் கோடீஸ்வரன் மற்றும் பிரதேச செயலாளர்க உட்பட கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் கிழக்கு மாகாண ஆளுநரின் பிரதிநிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். கோபாலரத்தினம் முதல் பிரதியை பெற்றுக்கொண்டதுடன் ஆளுநரின் ஆசிச் செய்தியையும் வாசித்து வைத்தார். இதன்போது பாட்டரசர் புகழ் கலிவிருத்தம், பனங்காட்டு அந்தாதி, சிந்து பாடுவோம், விருத்தமாயிரம் மரபுக் கவிதை போன்ற நூல்கள் வெளியிடப்பட்டன.

கவிஞர் கனக சூரியம் யோகானந்தம் ஒய்வு நிலை அதிபர் திருகோணமலை அவர்களால் நூல்களின் அறிமுக உரையும், பாட்டரசர் புகழ் கலிவிருத்தம் சாமஸ்ஶ்ரீ மற்றும் ஏ எல். கிதுர் முஹம்மது தி வலயக் கல்வி உதவி பணிப்பாளர் ஆகியோரால் ஆய்வுரையும் வழங்கப்பட்டது.

நூலாசிரியர் திருமதி சரளா விமலாராசாவுக்கு பாசுகவி எனும் பட்டமும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# அல்-ஜலால் அதிபருக்கு பிரியாவிடை நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தின் 17 ஆவது அதிபர் எம்.ஐ.எம். சைபுத்தீனின் பிரியாவிடை நிகழ்வு பாடசாலை அதிபர் ரீ.கே. எம்.சிராஜ் தலைமையில் நேற்று திங்கட் கிழமை பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பாடசாலை கல்வி சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ச/ஹதுல் நஜீம் பிரதம அதிதியாகவும், கல்முனை வலய கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் , பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். எச். றியாஷா , சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அஸ்மா அப்துல் மலீக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,பாடசாலை அபிவிருத்தி சபை பிரதிநிதிகள்,பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் பாடசாலை ஆசிரியை திருமதி சியாமா தாலிப் அவர்களின் அனுசரணையில் பாடசாலை நலன்புரிச் சங்கத்தினால் முன்னாள் அதிபரின் சேவையை உள்ளடக்கிய "தடம்" சஞ்சிகை இந்நிகழ்வில் வெளியீட்டு வைக்கப்பட்டது.









# தொழிற்கல்வி கற்கை நெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

எபெக்ஸ் கெம்பஸ் மொழி மற்றும் தொழில் பயிற்சி நிலையத்தின் பூரண அனுசரணையுடன் கைத்தொழில் அபிவிருத்தி சபை மட்டக்களப்பு மாவட்ட காரியாலயத்துடன் இணைந்து தொழிற்கல்வி கற்கைநெறிகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 250 பயிலுனர்களை கௌரவித்து அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை தவிசாளர் கலாநிதி சாரங்க அழகப்பெரும பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண, கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் தங்கமுத்து ஜெயசிங்கம், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், கிழக்கு மாகாண சுற்றுலா நிலைய பிரதம நெறிப்படுத்துனர் மோகன் கணபதிப்பிள்ளை, கைத்தொழில் அபிவிருத்தி சபை கிழக்கு மாகாண பணிப்பாளர் அத்துல திசாநாயக்க, எபெக்ஸ் கெம்பஸ் தவிசாளர் எம் எஸ் ஜெஸ்லின் ரிசாட் எபெக்ஸ் கெம்பஸ் கல்வி மேம்பாட்டு பணிப்பாளர் ஏ.ஆர்.எம் சர்ஜ/ன், கைத்தொழில் அபிவிருத்தி சபை மட்டக்களப்பு கிளை உத்தியோகத்தர் என். கோகுலதாஸ், பணிப்பாளர் கலாநிதி கலாரஞ்சனி மற்றும் மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.




## பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை!

எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும், இம்முறை பஸ் கட்டணத தில்மாற்றம்செய்யப்படமாட்டாது என பஸ் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

செப்டம்பர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

மாதாந்த எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம் இவ்வாறு எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையிலேயே இம்முறை எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணத்தை திருத்த முடியாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள்

சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

## கொடிகாமம் பார்வதி சமேத சிவன் கும்பாபிஷேகம்

கொடிகாமம் பார்வதி சமேத சிவன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6.05 மணி முதல் 6.50 மணி வரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் சனிக் கிழமை ஆரம்பமான எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிவரை நடைபெறும்.

சிவாகமரத்தினம் சிவசிறீ இராம. சிறீரங்கநாத குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பெருந்திரு விழா

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு, கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர்

ஆலய வருடாந்த பெருந்திரு விழா நாளை மறுதினம் 4 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை, 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. மறுநாள் 23ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையின் தலைவர் இ. மேகராசா தெரிவித்தார்.

## 2025 ஆம் ஆண்டில் 25 விடுமுறைகள்

2025ஆம் ஆண்டுக்கான பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களை பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க விடுமுறை நாட்கள் சட்டத்தின் 4ஆவது பிரிவின்படி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் மொத்தம் 25 விடுமுறை நாட்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.09.2024இல் வெளியிடப்பெற்றது.